கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

6. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருமே எதிர்பார்க்காத வகையில், சங்கம் வளர்த்த மதுரை மாநகரில், தமிழ்த்தாய்க்கு சிலை அமைக்க உத்தரவு பிறப்பித்து, தமிழ் மொழியின் பாரம்பரியப் பெருமையை உயர்த்திக் காட்டிய (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி எஸ். விஜயதரணி, கொஞ்சம் இருங்கள். அவர் குழுவின் அறிக்கையை அளிக்கிறார்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, இன்றைக்கு நீங்கள் பொது விவாதத்தில் பேசப்போகிறீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பி.ஜி. நாராயணன்: *அனைத்துத் தரப்பு மக்களையும் வாழ வைக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்திவரும் ஏழைகளின் இதய தெய்வம்*

2016 பிப்ரவரி 18] [திரு. பி.ஜி. நாராயணன்]

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, இந்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *செல்வி கே. பாலபாரதி, இன்று காலையில்தான் உங்கள் கட்சி உறுப்பினர் என்னிடம் அறிவிப்பைக் கொண்டுவந்து கொடுத்தார். (குறுக்கீடுகள்) இன்று காலையில்தான் கொடுத்தார். (குறுக்கீடுகள்)*

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. பி.ஜி. நாராயணன்: *2015–2016 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் இருநூற்று ஐம்பத்தொன்பதாவது முதல் இருநூற்று எழுபத்திரண்டாவது வரையிலான 14 அறிக்கைகளை, குழு அதிகாரம் அளித்துள்ளவாறு, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். (குறுக்கீடு)*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2016

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீடு (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.